M.C.N

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 77 பிரமோதூத் தை 30
1991 பெப்ருவரி 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## திருகோணமலை நகரில் சுதந்திரதின சுற்றிவளைப்பு

சுதந்திரதின விழா கொண்டாட்டத்திற்கு முன்எச்சரிக்கை நடவடிக்கையாக திருகோணமலையில் இராணுவத்தினர் நகரைச் சுற்றி வளைத்து 22 தமிழ் இளைஞர்களை கைது செய்தனர். இரண்டு தினங்களுக்குப் பின் கைது செய்யப்பட்டவர்களில் 18 இளைஞர்கள் மட்டும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதி மன்றத்தின் மூலம் விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டனர். ஏனைய 4 இளைஞர்களின் கதி என்ன ஆனது என தெரியவில்லை. (ப-10)

★ வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி வர முயன்ற

# இராணுவத்தினரை மடக்கிப் புலிகள்

# தாண்டிக்குளத்தில் கடும் சண்டை!

### இரு அதிகாரிகள் பலி: ஐந்து புலிகள் வீரமரணம்

வவுனியா நகரில் இருந்து வடக்கு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாண்டிக் குளத்தில் இரண்டாவது நாளாக சண்டை தொடர்ந்தும் நடைபெறுகிறது. மாமடு முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவ அணி ஒன்றை பறநாட்டான்கல் என்னும் இடத்தில் விடுதலைப்புலிகள் மடக்கி தாக்குதல் தொடுத்தனர்.

இம்மோதல் சுமார் 5 மணி நேரம் நடைபெற்றதாகவும் இரு இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

வரதன் (சத்தியசீலன், புளியங்குளம்), ஜனா (விஜயகுமார், முத்தையன் கட்டு), கருணா (பிரேம்குமார், சேமமடு), மகான் (விஜயசுந்தரம், பழனை), பிரேமன் (உதயகுமார், சின்னத்தம்பிராய்) இவர்களுக்கு புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

### வவுனியாவில் பரவலான விமானத்தாக்குதல்

வவுனியா மாவட்டத்தில் பம்மைமடு, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், புதுக்குளம், நெல்லுக்குளம் சாஸ்திரி கூழாங்குளம், ஓமந்தை ஆகிய இடங்களில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின.

நேற்று முன்தினம் காலை 8 மணியில் இருந்து இத் தாக்குதல் நடாத்தப்படுவதாகவும், வவுனியா விமானப் படை முகாமின் தளத்தில் இருந்து வந்தே குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்திவருவதாகவும் தெரிய வருகிறது.

பம்பைமடு குண்டு வீச்சு தாக்குதல் ஜீ. சீ. ரி. எம். எஸ். பாடசாலை முற்றாகச்

—04 ஆம் பக்கம் பார்க்க

### தாண்டிக்குளம் பகுதியில் தொடர்ந்து கடும் மோதல்

நேற்று முன்தினம் வவுனியா நகரில் இருந்து கவச வண்டி, ட்ரக் வண்டி, ஜீப் போன்றவற்றில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது அதிகாலை 4 மணிமுதல் இரவு 7 30 மணிவரை தாண்டிக் குளத்தில் பலத்த சண்டை நடைபெற்று இதன்போது பல இராணுவத்தினர் கொல்

—04 ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா - ரம்பைக்குளத்தில் ஷெல் தாக்குதல்

வவுனியா - ரம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஷெல் தாக்குதலால் மூவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எஸ். சூரி (33) படுகாயமடைந்தார்.

தாண்டிக்குளத்தில், பொம்மர்கள் குண்டு வீசியதில் பெ. சிம்சன் (21) கிளிநொச்சி காலில் படுகாயம் அடைந்தார்

துப்பாக்கிப் பிரயோகங்களும் நடாத்தப்பட்டதில் சிலர் காயமடைந்தனர். (74)

### மகா சிவராத்திரி

இன்று சைவர்கள் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கிறார்கள். சைவ ஆலயங்களில் நான்கு சாமங்களிலும் அபிஷேக ஆராதனைகளும், சொற்பொழிவு, புராணபடனம் பண்ணிசை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எமது சிறப்புக் கட்டுரை மூன்றாம் பக்கத்தில்!

### நாரந்தனையில் மிதிவெடியில் சிக்கி பெண்மணி இடது காலை இழந்தார்

நேற்று நாரந்தனை வடக்கு தம்பாட்டிப் பகுதியில் வீட்டின் அருகே கிடந்த மிதிவெடியில் சிக்கி கு.இராசம்மா (49) இடது காலை இழந்தார்.

இவரின் வீட்டில் மண்டை

—04 ஆம் பக்கம் பார்க்க

### கடற்படை சூட்டில் திருமலையில் இருவர் காயம்

கடந்த வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் திருகோணமலை நகரத்தில் உள்ள இராணுவத்தினரால் கனகம்மில் காவலரணடியில் ஜீப் வண்டியில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 தமிழர்கள் படுகாயம் அடைந்தனர் எனத் தெரிகிறது.

இப்பகுதி திருமலை தமிழர்கள் கூடுதலாக வாழும் இடமாகும். (ப 10)

### 500 க்கும் அதிகமானோர் தை மாதத்தில் காயமடைந்தனர்

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் வடக்கில் இடம்பெற்ற வான் தாக்குதல்களினால் 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

முன்பொருபொழுதும் இல்லாத அளவுகடந்த தை மாதப் பகுதிகளில் காயமடைந்தவர்களும், அவயவங்களை இழந்தவர்களும் வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது விமானத் தாக்குதலால் காயமடைந்தவர்கள் வார்டுகளில் நிறைந்திருப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது.(ப11)

### 5 கிராம சேவகர்களுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒரு உதவி அரச அதிபர் பிரிவில் ஐந்து கிராம சேவையாளர்கள் தீவுப்பகுதிக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இவர்கள் நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (33)

### தபால் உத்தியோகத்தர்கள் பொதிகளை எடுத்துவருகின்றனர்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில தபால் உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்திற்குரிய தபாற் பொதிகளை சயிக்கிள் மூலம் கொண்டுவந்து யாழ் பிரதம தபாலகத்தில் ஒப்படைத்து வருவதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (33

## நாளை தவக்காலம் ஆரம்பம்

கிறிஸ்தவ மக்கள் நாளை தவக்காலத்தை ஆரம்பிக்கின்றனர்.

நாளை புதன்கிழமை விபூதிப் புதன் அனுஷ்டிக்கப்படவுள்ளது. மார்ச் 24 ஆம் திகதி குருத்தோலை ஞாயிறும், 29 ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமையும் அனுஷ்டிக்கப்படும்.

மார்ச் மாதம் 31 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினமாகும். (16)

## சென்னை விபத்தில் எழுவர் பலி

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் மரணமானோரின் தொகை ஏழாக அதிகரித்துள்ளது.

திருமணத்தம்பதியினரை ஏற்றிச் சென்ற வான் ஒன்று மரத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

## பொலனறுவையில் 10வீடு தீக்கிரை

பொலனறுவை மாவட்டத்தில் உள்ள தமன என்ற கிராமத்தில் பத்து வீடுகள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகள் பெரும்பான்மை இனத்தினருக்குச் சொந்தமானவையென்றும் நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## கட்டுப்பாட்டைமீறியவர் கைதானார்

சாவகச்சேரியில் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக மண்ணெண்ணெய் விற்றவர்த்தகர் ஒருவர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்த எண்ணையும் பறிமுதல் செய்யப்பட்டது.

இவர் ஒரு போத்தல் மண்ணெண்ணையை 100 ரூபாவாக விற்பனை செய்த போதே கைது செய்யப்பட்டார். (ப-32)

## ஒன்பது தலைப் பாம்பு வாகனம்

ஒன்பது தலையையுடைய ஆதிசேஷ பாம்பு வாகனமொன்று மேலை வண்ணைநகர் அருள்மிகு மங்கள மகாகாளி தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் ஐந்து தலையுடைய பாம்பு வாகனங்களே தற்போது உள்ளன. இப்புதிய ஒன்பது தலை பாம்பு வாகனத்தை திருநெல்லையூர் இராஜரத்தினம் ஆசாரி உருவமைத்துள்ளார்.

## 18 வரை விண்ணப்பிக்கலாம்

வெளிமாவட்டப் பரீட்சார்த்திகளின் வேண்டுகோளுக்கிணங்க வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகளுக்கான சகலதர விண்ணப்பங்களும் இம்மாதம் 18 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்கள் விண்ணப்பத்துடன் மேலதிகக் கட்டணமும் செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப் படுகிறது. (70)

## 'களனி' பாதை அகலமாகும்

"களனி" சிறிய ரயில் பாதையை அகலமாக்கும் வேலைகள் இம்மாதம் 15 ஆம் திகதி மருதானையில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

முதலில் மருதானை முதல் நுகேகொட வரையிலான பாதை அகலமாக்கப் படும். இரண்டாவது கட்டமாக நுகேகொட முதல் ஹோமாகம வரையிலான பகுதி புகையிரதப் பாதை அகலமாக்கப்படும்.

முழுத்திட்டத்தினையும் பூர்த்தியாக்க 30கோடிரூபாசெலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தற்போது 10 மைல் வேகத்தில் நடைபெறும் இந்த மார்க்கரயில் சேவையை 25 மைல் வேகமாக அதிகரிப்பதுடன் 5 மடங்கு அதிகளவு பயணிகளையும் ஏற்றிச் செல்லும் வாய்ப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---


யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

எரிபொருள் விநியோக
### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்கலனில் விநியோகிப்பதற்குத் தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்.
2. எஸ் ஏ. ஈ 40 ரக என்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50லீற்றர்.
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர். அல்லது மொத்தம் 2000 லீற்றர்.
4. பெற்றோல் வாராந்தம் 90 லீற்றர்.

வாராந்தக்கூறு விலைகள் 30.04.1991 வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது. ஆனால் கூறுகாரர்கள் விரும்பினால் எந்தக்கால எல்லைவரை இந்தக் கூறு விலைகள் ஏற்புடையன எனக் குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

கூறு விலைகள்மீளளிக்க கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/ பல்கலைக் கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 21.02 91 காலை 10.00 மணிக்கு முன் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக் கழக நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும் யாழ் பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம். 02067


---

## வவுனியா மோதலில் பல பொதுமக்கள்பலி!

## தொடர்ச்சியாக ஆகாயத் தாக்குதல!!

நேற்று முன்தினம் வவுனியாப் பகுதியில் இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இடையில் அகப்பட்டுக்கொண்ட சில பொதுமக்களும் இறந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திடீரென மோதல் ஆரம்பித்ததும் மக்கள் கலைந்து ஓடியதாகவும் பஸ்ஸைவிட்டு இறங்கி ஓடும்போது மூவர் இராணுவத்தினரின் குண்டடிபட்டு இறந்துவிட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நான்கு பொம்மர்களும்,மூன்று ஹெலிகளும்தாண்டிக்குளம், நொச்சி மோட்டைப் பகுதிகளில் இடைவிடாது தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பதாக நேற்று நண்பகல் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்துகிடைத்த செய்தியொன்றில் வவுனியா எல்லைப் படைமுகாம்களில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (70)

## இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசு பெறும் ஆக்கங்கள் விபரம்

இலங்கை இலக்கியப் பேரவை 1987/88 ஆம் ஆண்டுகளுக்கான பரிசில்களைப் பெறும் எழுத்தாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இலக்கிய ஆய்வு:— தமிழ்தந்த தாதாக்கள் - க. சி. குலரத்தினம்.

சான்றிதழ் பெறும் நூல்:- வாலி - அகளங்கன்.

நாவல்:- தண்ணீர் - கே. டானியல்.

சான்றிதழ் பெறும் நாவல்கள்:- தீம் தரிகிட தித்தோம்- செங்கை ஆழியான், தெய்வ தரிசனம் - செ குணரத்தினம்.

சிறுகதைக் கோவை:- இரவின் ராகங்கள் – ப.ஆப்தீன்.

சான்றிதழ் பெறும் சிறுகதைத் தொகுதிகள்:- வலை, டானியல் அன்ரனி.

காவியம்:- சாகுந்தல காவியம் - சம்பந்தன்.

கவிதைத்தொகுதி:- எட்டாவது நரகம் - சோலைக்கிளி.

சிறுவர் இலக்கியம்:- காட்டில் ஒரு வாரம் - அநு. வை. நாகராசன்.

சான்றிதழ் பெறும் நூல்:- பூந்தோட்டம் - கோப்பாய் சிவம்.

நாடகம்:- தப்பி வந்த தா-மௌனகுரு.

சான்றிதழ் பெறும் நாடக நூல்கள்:- மௌனகுருவின் நாடகங்கள் - மௌனகுரு. கெட்டிக்காரர்கள் - அராலியூர் ந சுந்தரம்பிள்ளை.

சமய இலக்கியம்:- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் – ஆத்மஜோதி நா.முத்தையா.

சான்றிதழ் பெறும் நூல்:- சைவவிரதங்களும், விழாக்களும் - ப. சிவானந்த சர்மா.

## யாழ் கல்லூரியில் வரைதல் போட்டி

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் பாடசாலை மாணவருக்கான சித்திரம் வரைதல் போட்டி ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் நடாத்தப்படவுள்ளது

இப்போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் யாழ்ப்பாணம் கல்லூரி ஆசிரியர் (லயன்) டாக்டர் போட்டருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


### ஆனந்தா கலண்டர்

- மலிவு விலையில் பஞ்சாங்கக் கலண்டர் -

1991ஆம் ஆண்டுக்கு ஆனந்தா கலண்டர் நாளை புதன் கிழமை வெளிவருகிறது. தமிழ் ஆங்கிலத் திகதிகள், அரச வங்கி வர்த்தக போயா விடுமுறைகள், அமாவாசை, பூரணை, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, கார்த்திகை விரத தினங்கள், மற்றும் அட்டமி நவமி, பிற விசேட தினங்கள் யாவும் அடங்கியது. காலத்திற்கேற்ற சிக்கனக் கலண்டர். அழகியவண்ணப்படங்கள் கொண்ட மட்டைகளுடன். விலைரூபா 22/- மட்டுமே. கடதாசித் தட்டுப்பாடு காரணமாக சொற்ப பிரதிகளே அச்சிடப் பெறுவதால் விற்பனையாளர்கள் உடனே தொடர்பு கொள்க. விற்பனைக்கழிவுண்டு.

ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
02065

# கொழும்பை நோக்கிவந்த அமெரிக்க கப்பலில் மர்மத்தீ!

## ஒரு மாலுமி பலி; பதினேழுபேரைக் காணவில்லை

கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த அமெரிக்கக் கப்பலொன்று மர்மமான முறையில் தீப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் கேரளம் - கொச்சி துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.

இக்கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் ஒரு மாலுமி கொல்லப்பட்டதாகவும், பதினேழு மாலுமிகள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த இக்கப்பலில் எவ்வாறு தீப்பற்றியது என்பது பற்றியோ, இக்கப்பல் அமெரிக்க இராணுவக் கப்பலா அல்லது வியாபாரக் கப்பலா என்பது பற்றியோ, கொச்சியிலிருந்து இக்கப்பல் கொழும்பிற்குச் செல்ல வேண்டியதன் காரணம் என்னவென்பது பற்றியோ உடனடியாக எதுவும் அறியப்படவில்லை என ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### காரைநகரில் சிவராத்திரி விழா

காரைநகர் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சமித்தியினர் நடாத்தும் மகா சிவராத்திரிவிழா சயம்புவீதி சமித்தி மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

'ஆத்மஜோதி' நா. முத்தையா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் செல்வி இ. சுகந்தினியின் இசைக்கச்சேரி, ஈழத்து சதனின் பல்குரல் நகைச்சுவைக்கதம்பம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

### இந்தியகடற்பகுதியில் அத்துமீறி பிரவேசித்த 17 தாய்லாந்துப் பிரஜைகள் கைது!

இந்திய கிழக்குக்கடற்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்த தாய்லாந்து விசைப்படகொன்றை இந்தியக்கடற்படை கைப்பற்றியுள்ளது.

இப்படகில் இருந்த பதினேழு தாய்லாந்துப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தாய்லாந்து விசைப்படகில் இருந்து ஒருலட்சம் ரூபா பெறுமதியுடைய மீன் வகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

### கிளி. மாவட்டப் பாடசாலைகளில் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்கள்

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருபது கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்கள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டுறவுச் சங்கங்களில் பாடசாலை மாணவர்களை சமூக உணர்வு, தலைமை தாங்கும் இயல்பு, கூட்டறிவு முகாமைத்துவப் பயிற்சியது இம முறைச் செயல்முறைப் பயிற்சி ஆகியவற்றை வளர்த்தெடுக்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் 20 சங்கங்களிலிருந்து இவ்வாண்டில் வளர்ச்சி ஏற்படும் எனவும் கூட்டுறவாளர்களின் பங்களிப்பில் உள்ள பற்றாக்குறையை இத்திட்டம் நிவர்த்தி செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது

(ப-06)

### 'அரசின் புதியசட்டங்களால் - கொலைச் சந்தேகநபர்களே நீதிபதியாகிறார்கள்'

அரசின் புதிய சட்டங்கள் இலவற்றின் அமுலாக்கம் கேலிக்கூத்தாக உள்ளதோடு இப்புதிய சட்டத்திருத்தங்களின் மூலம் பாமர மக்கள் நீதியை எதிர்க்க முடியாமலுள்ளதாக பாராளுமன்றத்தில குடியியல் நடவடிக்கை திருத்த விவாதத்தில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னான்டோபிள்ளை குற்றம் சாட்டியுள்ளார்.

வழிபாட்டுத்தலமும் பாடசாலையும், பொலிஸ் நிலையமும் இணைந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் புதிய திட்டத்தின்கீழ் தென்பகுதி கிராமமொன்றில் வழக்கொன்றை விசாரிப்பதற்கு சென்ற ஐவர் அடங்கிய குழுவொன்றில் மூவர் கொலை வழக்கொன்றின் சந்தேக நபர்கள் எனவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வாசுதேவ நாணயக்கார எம். பி. 'பொலிசாரை தாக்கக் கூடாதென சட்டம் உள்ளது. அதுபோல் பொலிஸார் தாக்கக் கூடாதெனவும் சட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்' எனத் தெரிவித்தார்.

### கோழிவளர்ப்பு, கிருமிநாசினி பாவனையும் பௌத்தகோட்பாட்டுக்கு முரணானவையாம்!

நன்னீர் மீன்பிடித் திட்டத்தை தடை செய்யும் அரசின் நடவடிக்கையை நீர்கொழும்பு, சிலாபம் பகுதி மீனவர்கள் எதிர்த்துள்ளனர்.

நன்னீர் மீன்பிடிப்பு ஓர் உயிர்க்கொலை எனவும் அதற்கு ஊக்குவிக்கக் கூடாதெனவும் பௌத்த குருமார் சிலர் தெரிவித்ததை அடுத்து அரசு நன்னீர் மீன்பிடித்தலுக்கு ஆதரவளிப்பதில்லையென முடிவெடுத்திருந்தது.


பௌத்த கொள்கையின்படி கிருமிநாசினிகளைப் பயிர்களுக்குப்பாவித்து நுண்ணுயிர்களைக் கொல்லுதல், கோழிகளை வளர்த்து அவற்றை இறைச்சிக்காக வெட்டுதல் என்பனவும் 'உயிர்களைக் கொல்லுதல்' என்னும் பௌத்த சாசனத்திற்கு முரணானவையே. அப்படியாயின் அவற்றை ஏன் அரசு தடை செய்யவில்லை எனக் கேட்டு நீர்கொழும்பு மீனவர் சமுதாயத்தலைவர் சிறிலால் பெர்னாண்டோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### வர்த்தகரைத் தாக்கி பணம் அபேஸ்

சைக்கிளில் சென்ற வியாபாரி ஒருவரை இடை மறித்துத் தாக்கிய ஒரு கோஷ்டியினர் அவரிடமிருந்து 5200 ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கிளாலியில் நிகழ்ந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளாகிய வர்த்தகர் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ப-32)



## மகாசிவராத்திரி விரதம்

— க. சி. குலரத்தினம்

### வாழ்ந்து அறிவது சமயம்

சைவ சமயம் படித்தறிவதைக் காட்டிலும் வாழ்ந்தறிவதாகும் என்பதை எம் முன்னோர் விளக்கிப் போனார்கள். ''ஓதியாரும் அறிவாரில்லை'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ''நாலும் வேண்டுமோ நுண்ணுணர் வோர்கட்கே'' என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளினர். சமயமும் வாழ்க்கையும் நெருக்கமாகப் பொருந்தவேண்டும். வாழ்க்கையோடு பொருந்தாத சமய அறிவாலும் சமய அறிவில்லாத வாழ்வாலும் பிரயோசனமில்லை. புத்தகச் சுமையால் சித்தந் தெளியாது.

### விரதங்களின் சிறப்பு

வாழ்க்கையில் சமய அறிவையும் அநுபவத்தையும் ஊட்டுஞ் சாதனங்களுள் விழாக்களும் அமையும். சில விரத அநுட்டான விதிகளோடு அமைவன இவற்றுள் சிவராத்திரி என்பது சிவனுக்குரிய இரவு. இவ்விரவில் மனம் பொறிவழிப் போகாமல் அடங்கி நிற்கப் பழகுதல் முக்கியம். நித்திரையில் செய்யவியலாத நியமத்தை விழிப்பிலே செய்யலாம். புலன்களை அடக்கிய மனத்தில் இறைவனை நீள நினைப்பதற்கும், நினைப்பற நினைப்பதற்கும் வசதி கிடைக்கும். அவ்வேளை உணவில்லாமலும், ஆலயத்தை அண்டியும் இருத்தல் விரும்பத்தக்கதாகும். ஆலயத்தை அண்டியிருத்தலே உபவாசம்.

### சிவவழிபாட்டு விரதம்

ஒவ்வொரு மாதத்திலும் வரும் தேய்பிறைக் காலத்துப் பதினான்காம் நாள் சதுர்த்தசி திதி சிவவழிபாட்டுக்குரியதாம். இவற்றுள் மாசிமாதத்தில் வரும் சதுர்த்தசி மிகச்சிறந்ததாதலின் மகாசிவராத்திரி எனப்படும். அமாவாசை கிட்டாத, முட்டாதசதுர்த்தசித் திதியே சிறந்ததாகும்.

சிலவேளைகளில் திங்கட்கிழமையும் திருவோணநட்சத்திரமும் கூடிவருவது மிகச் சிறந்ததாமென்பர். சிவராத்திரி நாளில் ஆசாரசீலராய்த் திருக்கோயில் தரிசனஞ்செய்வதிலும், இரவில் நான்கு சாமவேளைகளிலும் நித்திரை கொள்ளாமல் அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகளைக்காண்பதும்; சிவசிவ என்னும் சிந்தனையோடு மற்றெதனையும் நினையாதிருந்தும் நடந்தும், வழிபடுதலும் நல்லதாகும். மறுநாள் பொழுது விடிந்ததும் நீராடி வழிபாடாற்றி அடியார்களை உண்பித்துத் தாமும் உண்ணல்விரத அனுட்டானமாகும். திருமுறைகளைப்பண்ணோடு ஓதுதலும், ஓதக்கேட்டு உருகுதலும் சிவபுராண படனங்கேட்டு இன்புறுதலும், முன்னும், பின்னும் அமைதல் நல்லவாகும்.

—04 ஆம் பக்கம் பார்க்க

# பயணிகளை இறக்கிய பின் ராணுவத்தினர் பஸ்ஸைக் கொளுத்தியதைக் கண்டேன்

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களின் போது பஸ் ஒன்று பயணிகள் இறக்கப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

பறநாட்டங்குளம் பகுதியில் இந்த பஸ் சென்று கொண்டிருந்த போது திடீரென வெடிச்சத்தங்கள் காட்டுப்பகுதியில் இருந்து சரமாரியாகக் கேட்டது என அங்கு காயமடைந்து யாழ்ப்பாணம் வந்த க. தவராசா(30)காரைநகர் தெரிவித்தார்.

பறநாட்டங்குளம் சந்தியில் ஹெலியும், பொம்மர்களும் கடும் தாக்குதல்களை நடாத்தியதாகவும் அவர் சொன்னார்.

வெடிச்சத்தங்கள் மத்தியில் இவர் நிலத்தில் தவழ்ந்து தவழ்ந்து காடுகளினூடாக வரும்போது தனது கையில் சூடு பட்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

'காட்டிற்குள் இருந்து பஸ்ஸை அவர்கள் எரித்ததை நான் கண்டேன்' என்றும் அவர் கூறினார்.(ப14 70,74,

## பொருளாதாரம் சீர்குலைந்தாலும் ஈராக் அடிபணியாது - ஹுசைன்

கடந்த 24 நாள்களாக ஈராக் மீது அமெரிக்க படைகள் விமானக் குண்டு வீச்சு நடாத்தி பொருளாதாரத்தை சீர்குலைத்து விட்டன. என்ன நேர்ந்தாலும் ஈராக் யாருக்கும் அடிபணியப்போவதில்லை என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனது வானொலி உரையின் போது குறிப்பிட்டார்.

இதே வேளை ஈராக்கில் இரத்தக்களரி ஓடுவதற்கு காரணமாக இருக்கும் ஒவ்வொருவரும் பழிவாங்கப்படுவர் என பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் அரபாத் எச்சரித்துள்ளார்.

ஈராக்கில் நடந்து வரும் விமானக் குண்டு வீச்சினால் பல குழந்தைகள் பலியாகியுள்ளதாக ஐ: நா. பொதுச் செயலர் பெரஸ்டி குவிலர் தெரிவித்துள்ளார். எஞ்சிய குழந்தைகளுக்கு போதியளவு பாலுணவு வழங்க அமெரிக்கா மறுத்து விட்டமைக்கு அவர் தமது கவலையை வெளியிட்டார்.

ஈராக்கின் பிரதிப் பிரதமர் ஹமாதி லிபியா சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிவராத்திரி-..

### இலிங்க உற்பவகாலம்

சிவராத்திரி சம்பந்தமாகப் பல வரலாற்றுக் கதைகள் உள்ளன. அவற்றில் சிவனைப் பூசித்தவர்கள் பெற்ற பெரும் பேறுகள் கூறப்பெற்றுள்ளன. ஒரு சமயம் மால் என்னும் அறியாமையும், நான் என்னும் அகங்காரமும் உள்ள இரு பெரியவர்கள் உண்மையை உணரும் வகையில் சிவபெருமான் ஒளிப்பிழம்பாகத் தோன்றி, இறுதி இலிங்க மயமான வேளையே இலிங்கோற்பவ காலம். இவ்வேளை புனிதமும், மகத்துவமும் கொண்டது. இக்காலத்தில் இறைவனை நேரில் கண்டு வழிபடுதல் பயனுள்ளதாகும் இத்தகைய வேளை நடுச்சாமத்துப் பன்னிரண்டு மணிக்கு முன்னும், பின்னும் அமையும் சாமமாகும்.

### அகந்தையும் அறியாமையும்

அறியாமையோடும், அகந்தையோடும் தேடிய பெரியவர்கள் திருமாலும், நான்முகனும் ஆவர். நான்முகன் முடியைத் தேடி உயரவும் திருமால் அடியைத் தேடி ஆழவும் சென்றவர். அவர்களுக்குச் சிவ சோதியாய சிவபெருமான் காட்சி கொடுத்தருளியமை பலபுராணங்களில் கூறப் பெற்றுள்ளது. திருமுறைகளுள் திருமூலர் தமது பத்தாந்திருமுறையாய திருமந்திரத்திலும் பலவிடங்களில் விளக்கியருளியுள்ளார். திருநாவுக்கரசுநாயனாரும் இச்சம்பவத்தை விளக்கிப் பாடியருளிய பாடல்களுள் ஒன்று இது;

''செங்கணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித்திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே
தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய
மூர்த்தியே''

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 12-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## போதைவஸ்து விற்றவருக்கு யாழ் நகரில் மரணதண்டனை

போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்ட இராமலிங்கம் நடராசா. (35) கொழும்பு என்பவருக்கு விடுதலைப் புலிகள் நேற்று மரணதண்டனை வழங்கினர்.

தட்டாதெருச்சந்தியில் காலை 10.30 மணிக்கு இத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவரது சடலத்திற்கு அருகில் இவர் செய்த குற்றங்கள் அடங்கிய பட்டியல் தொங்கவிடப்பட்டிருந்தது. (74, 33)

## 50 தமிழர் கைது

நேற்று முன்தினம் காலை அம்பாறை மாவட்டம் சின்னத்தோட்டம்பகுதியை சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் அங்கிருந்து 50 தமிழ் மக்களை கைது செய்து தாண்டியடி அதிரடிப்படையினர் முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். (71)

### வவுனியாவில்...

சேதமடைந்தது. அத்துடன் நரசிம்மன் கோவிலும் சேதமடைந்ததுடன் 2 கால் நடைகளும் கொல்லப்பட்டன.

அதேவேளை வவுனியா நகரில் இருந்து குடிமனைகள் நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் தொடர்ந்து நடாத்தப்படுகின்றது. (71)

### நாரந்தனையில்...

தீவில் இருந்து பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் மிதி வெடிகளை வைத்து விட்டுச் சென்றதாகவும் அவை விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப14,74)

### தாண்டிக்குளம்...

லப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. விடுதலைப் புலிகளின் பொறி வெடியில் சிக்கி 5 இராணுவத்தினர் காலிழந்தனர். தொடர்ந்து இப்பகுதியில் கடும் மோதல் இடம் பெற்று வருகிறது. இராணுவம் தாண்டிக்குளத்திலேயே தரித்து நிற்கிறது. (71)

## தமிழருக்கு வந்த நிவாரணத்தை 'சர்வோதயம்' சிங்களவருக்கு வழங்கியது

திருகோணமலைப் பகுதி தமிழ் அகதிகளுக்கு வெளிநாடுகள் அனுப்பிய ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பாத்திரங்களை 'சர்வோதயம்' சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கியுள்ளது.

சர்வோதயத் தலைவர் ஏ. ரீ. ஆரியரட்னாவின் மனைவி இவற்றைத் தமிழருக்கு வழங்காது தடுத்து 'சிறிமாபுரம்' குடியேற்ற வாசிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கு திருகோணமலை சர்வோதய இணைப்பாளரான தமிழரும் உடந்தையாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## தமிழ் போராளிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் என்கிறார் சஹாய்

அடுத்த பத்து நாள்களில் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டம் அனைத்தும் முற்றாக கட்டுப்படுத்தப்படும் என இந்திய உள்விவகார அமைச்சர் சுபோத்கான் சஹாய் நேற்று தெரிவித்தார்.

தமிழ்நாடு வந்துள்ள அமைச்சர் சஹாய் திருச்சியில் செய்தியாளர்களிடையே பேசிய போதே இத்தகவலை வெளியிட்டார்.

## தமிழ் மொழி படிக்க வேண்டும் என்கிறார் சுதந்திரக்கட்சி எம். பி.

முதலில் மொழிப் போராட்டமாக இருந்தது இப்போது உள் நாட்டு போராக விரிவடைந்து விட்டது என சுதந்திரக்கட்சி எம். பியான லக்ஷ்மன் கிரியல்ல பாராளுமன்றத்தில் கூறினார்.

இப்போதைய இக்கட்டான நிலைக்கு மூத்த எம். பிக்களே பொறுப்பு ஏற்கவேண்டும் ஒரு பயனும் இல்லாத கிரேக்க, பாளி மொழிகளைப் படித்த வேளை நாம் தமிழைப் படித்திருக்கலாம் எனவும் அவர் சொன்னார்.

வடக்கிலும் தெற்கிலும் ஜனநாயக உரிமைகள் மீட்கப்படவேண்டும் என்றும் அவர் சொன்னார். (ப6)

## பசளை கொண்டுவந்தவர்கள் வவுனியாவில் தடுத்துவைப்பு

துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மூவர் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சங்க லொறியில் அமோனியம் சல்பேட் பசளை மூடைகள் காணப்பட்டதையடுத்து லொறி உட்பட அதன் சாரதி கிளினர் பொருள் கொள்வனவு அதிகாரி ஆகியோரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

## எரிபொருள் கிடைக்காததால் பல்கலைக்கழகம் பாதிப்பு

யாழ் பல்கலைக்கழகத்திற்குரிய டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரி பொருள்கள் முற்றாகத் தீர்ந்து விட்டமையால் மருத்துவ, விஞ்ஞான பீடங்கள் முழுமையாக இயங்க முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ் பல்கலைக்கழகத்திற்குரிய விடுதிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இரவு நேரங்களில் கல்வி மற்றும் நீர் வசதிகளை வழங்க முடியாது இருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுவரைகாலமும் யாழ் பல்கலைக்கழகத்திற்கென்று கப்பலில் எந்த வகையான எரிபொருளும் அரசினால் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ப11)

## பெரியாஸ்பத்திரிக்குஎரிபொருள் வரவில்லை

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதித்த எரிபொருளை சுகாதாரத்தலைமையகம் இம்முறை கப்பலில் அனுப்பி வைக்கவில்லைஎன ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (74)